**O.S. No.80/2021**
**P.W.1 - திரு. இளங்கோவன்**
**நாள் : 15.04.2026.**

**பிரதிவாதிகள் 1, 9 முதல் 14 தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டுள்ளார்.**

**1 , 9 முதல் 14 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

என் மனைவியின் வாரிசு என்ற அடிப்படையில் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன். என் மனைவி, செல்லம் சேர்வை மற்றும் மீனாட்சியம்மாள் ஆகியோர்களின் வாரிசுகள் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்திற்கான வருவாய் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்திற்கான வருவாய் பதிவேடுகளில் என் மனைவியின் பெயர் உள்ளது. இந்த வழக்கில் பிரதிவாதிகள் என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால், தெரியாது. தாவா சொத்துக்களை பொறுத்து 1 முதல் 13 பிரதிவாதிகள் பாக பத்திரம் எழுதியுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால், எனக்கு தெரியாது. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு தாவா சொத்துகளுக்கு வில்லங்கம் போட்டு பார்த்தேன். மேற்படி செல்லம் சேர்வை மற்றும் மீனாட்சியம்மாள் ஆகியோர்களின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்கள் செல்லம் சேர்வை மற்றும் மீனாட்சியம்மாள் பெயரில் தான் கிரையம் பெறப்பட்டது. அவர்கள் காலமான பின்பு அவர்களுடைய வாரிசு சான்றிதழ்களை தாக்கல் செய்த பின்பு தான் பத்திரம் பதிவு செய்ய முடியும் என்றால் சரிதான். சார்பதிவாளர் அவர்கள் வாரிசு சான்றிதழ்களை சரி பார்த்துதான் பத்திரம் பதிவு செய்திருப்பார் என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் மட்டும் தான் செல்லம் சேர்வை மற்றும் மீனாட்சியம்மாளின் சட்டபூர்வமான வாரிசுகள் என்றால், சரியல்ல. பிரதிவாதிகளுடன் சேர்ந்து தாவா சொத்தை அனுபவம் செய்வதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்களின் மதிப்பு எனக்கு தெரியாது. எனது மனைவி லட்சுமி என்பவருக்கும் பிரதிவாதிகளின் குடும்பத்திற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது

என்றால் சரியல்ல. செல்லம் சேர்வை மற்றும் மீனாட்சியம்மாள் ஆகியோர்களுடைய ஐந்து பிள்ளைகளில் என் மனைவி இரண்டாவது மனைவி ஆவார். செல்லம் சேர்வை மற்றும் மீனாட்சியம்மாள் ஆகியோர்களின் வாரிசு சான்றிதழ் கேட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால், இந்த வழக்கு தான் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துகளுக்கும் என் மனைவிக்கு எந்த சம்மந்தமில்லாததால் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.04.15 17:11:31 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.